**பலங்கொட நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 21 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் பலங்கொட நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பணமாக கிடைத்திருந்த கடையறை வருமானம் ரூபா 46,358 கிடைக்க வேண்டிய கடையறை வருமானத்திற்கு பதிலிடப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொருப்புக்கள் மீதிகளை ஒன்றுடன் ஒன்றை பதிலிடக் கூடாது. | முற்பண கடையறை வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய கடையறை வருமானம் மீண்டும் ஜர்னல் குறிப்பு 07, 08, 09 இனூடாக 2019 ஆண்டில் சீராக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நகர சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் விசாரிக்கபடும் 04 வழக்குகள் மற்றும் நகர சபையினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 03 வழக்குகள் பற்றி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | இவ் வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவதுடன் ஏதேனும் காரணத்தால் அவ்வழக்கு நடவடிக்கைகளினால் எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களுக்கு தாக்கம் செலுத்தக் கூடும் எனும் எதிர்பார்பின் மாத்திரம் அதனை நிதிக்கூற்றுக்களில் சிராக்க அல்லது வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | முற்கால தவறுகள் ரூபா 175,709 இனை திருத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தவறுகளை திருத்தி கணக்குகளில் சீராகக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டில் அன்பளிப்பாக கிடைத்திந்த நூலக புத்தகங்கள் 2019 ஆண்டில் சீர்செய்து கணக்கீடு செய்யப்பட்டது. அவ்வாறே 2015 ஆண்டு பொருட்கள் மெய்மை ஆய்வறிக்கை பரிந்துரைகளின் பிரகாரம் பராதீனம் செய்யப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | நூலக புத்தகங்களை 2019 ஆண்டில் கணக்குகளுடன் சீராக்கப்பட்டது. |
| (ஈ) | பெறுமதி ரூபா 57,770 ஆன 18 பொருட் பதிவேட்டு பண்டங்கள் இறுதி இருப்பு பெறுமதியிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. | பொருட்கள் வகைகளை சரியாக இனங்காண வேண்டும். | 375 வெள்ளை கொடிகள் மற்றும் 355 செடின் களர் கொடிகள் தவிர ஏனைய பொருட்களின் பெறுமதிகள் 2019 ஆண்டின் போது இன்வென்ட்ரி பதிவேட்டிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. வெள்ளை கொடிகள் மற்றும் செடின் களர் கொடிகளை வேறான பதிவேடொன்றில் குறித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (உ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 540,386 ஆன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மேலும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2018 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் நடைமுறையல்லாத சொத்துக்களாக 2019 ஆண்டில் கணக்குகளிற்கு உட்படுத்தப்பட்டது. |
| (ஊ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு பொருட்கள் மெய்மை ஆய்வுகளின் போது பராதீனம் செய்யப்பட்ட கிரயம் ரூபா 39,947 ஆன நூலக புத்தகங்கள் மற்றும் விற்பனை பெறுமதி ரூபா 57,835 ஆன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கிரயத்தை இனங்கண்டு பொருத்தமான சொத்து கணக்குளிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும் | 2017 ஆண்டில் பொருட்கள் மெய்மை ஆய்வுகளின் போது பராதீனம் செய்யப்பட்ட ரூபா 59,195 ஆன நூலக புத்தகங்களினதும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் பெறுமதியை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2018 ஆண்டில் பொருட்கள் மெய்மை ஆய்வின் போது இனங்காணப்பட்ட பராதீனம் செய்ய பரிந்துரைக்கப்பட்ட நூலக புத்தகங்களினதும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் பெறுமதி ரூபா 20,886 இனை 2019 ஆண்டு இரண்டாம் காலாண்டில் சீராக்கப்படவுள்ளது. |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் நகர சபைக்கு சொந்தமான 20 காணிகளிற்குரிய பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது காணிகள் மற்றும் கட்டிடங்கள் தவிர ஏனைய அனைத்து சொத்துக்களும் சபரகமுவ மாகாண சபை மூலம் அறிமுகப்படுத்தியுள்ள சொத்துக்கள் முகாமை வேலைத் திட்டத்திற்கு உட்படுத்தியுள்ளதுடன் காணிகள் மற்றும் கட்டிடங்களிற்காக அரச |

| | | | |
|---|---|---|---|
| | | | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்று அவ் வேலைத்திட்டத்திற்கு உட்படுத்தப்படவுள்ளது. |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது இறுதி களஞ்சிய இருப்பு ரூபா 3,487,377 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இவ் இறுதி இருப்பு தொடர்ந்தும் நிலவி வரும் வேறுபாடுடொன்றாவதுடன் 2019 ஆண்டில் அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஐ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 776,932 ஆன செலுத்த வேண்டிய 16 மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் | 2018 ஆண்டில் செலுத்த வேண்டிய கடன் கொடுனர் ரூபா 446,843 மற்றும் களஞ்சிய கடன் கொடுனர் ரூபா 330,089 இனை சரிசெய்யவென 2019 ஆண்டின் கணக்குகளிற்கு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (ஒ) | மீளாய்வாண்டு இறுதியில் அன்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா 78,741 பெறுமதியான 270 நூலக புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் | 2018 ஆண்டில் அன்பளிப்பாக பொது நூலகத்திற்கு கிடைத்த புத்தகங்களை 2019 ஆண்டில் கணக்குகளிற்கு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (ஓ) | நகர சபைக்கு சொந்தமான ஆயுர்வேத மத்திய நிலையத்தின் ஆரம்ப மற்றும் இறுதி இருப்பு முறையே ரூபா 458,927 மற்றும் ரூபா 369,262 உம் மேலும் சம்பத் பியசவின் ரூபா 5,039 ஆன இறுதி இருப்பும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் | தவறுதலாக ஆயுர்வேத மத்திய நிலையத்தின் மற்றும் சம்பத் பியசவின் இருப்புக்கள் கணக்குகளிற்கு உட்படுத்தல் விடுபட்டுள்ளதுடன் 2019 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது அனைத்து இருப்புக்களும் கணக்கீடு செய்யப்படும். |
| (ஔ) | மீளாய்வாண்டு இறுதியில் முற்பணமாக கிடைத்த வீத வரி ரூபா 471,802 இனை வீத வரி கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு சீராக்காது நானாவித வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | வீத வரி தொடர்பான கணனி வேலைத் திட்டத்திலுள்ள குறை காரணமாக எதிர் வரும் ஆண்டிற்காக கிடைத்த வீத வரியை உள்ளீடு செய்ய இயலாதுள்ளது. இதனை 2019 சனவரி வீத வரி வருமானத்துடன் சீராக்கியுள்ளதுடன் கணனி வேலைத் திட்டத்தை சரி செய்து அவ்வாறான தவறுகளை தவிர்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (க) | மீளாய்வாண்டு இறுதியில் 03 கட்டுப்பாட்டு கணக்குகளின் மீதிகளிற்கும் அவற்றுடன் தொடர்புடைய பேரேட்டு கணக்கு | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சட்டபூர்வமாக கடைகளை ஒப்படைக்காத ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணத்தையும், முன்னைய |

| | | |
|---|---|---|
| மீதிகளின் கூட்டுத் தொகையிற்குமிடையில் ரூபா 558,589 ஆன வேறுபாடு நிலவின. | | ஆண்டுகளிலிருந்து நிலவிவரும் சபைக்கு சொந்தமான சொத்துக் கணக்கையும், பெகோ இயந்திர பில்லிடல் குறைவாக குறிப்பிடப்பட்டதனால் ஏற்பட்டுள்ள வேறுபாட்டையும் ஜர்னல் குறிப்பினூடாக 2019 ஆண்டில் கணக்குகளுடன் சீராக்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பெறுமதி ரூபா | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நகர சபை அதிகார சட்டத்தின் 164 (2) பிரிவு | 1987 ஆண்டில் இலங்கை சுற்றுலாத் துறை சபையில் பதிவு செய்யப்பட்ட நதர சபை எல்லையிலுள்ள தங்குமிட விடுதிகளின் கிடைப்பனவு மீது அறவிட வேண்டிய 1 சதவீத வரியை 2018 திசெம்பர் வரையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | - | சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2019 ஆண்டு முதல் சுற்றுலாத்துறை சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தங்குமிட விடுதிகளிற்கான அது தொடர்பான அறிக்கை பெறப்பட்டு பெறுவனவை அடிப்படையாகக் கொண்ட 1 சதவீத சுற்றுலா வரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.2 பிரிவு | நகர சபை தவிசாளர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயரிடப்படும் பிரதிநிதிகள் இருவர் உள்ளிட்ட மூவரைக் கொண்ட குழுவொன்றினால் சமுதாய அடிப்படை சங்கங்களின் ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்ய வேண்டிய போதும், 26 ஒப்பந்தங்கள் தொடர்பில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 11,993,714 | வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளை கடைபிடிக்க வேண்டும் | சபை தீர்மானத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களினூடாக செயற்படுத்தவும் பிரதேச செயலாளரின் இயலுமை சான்றிதழை பெற்ற பின் அச் சமுதாய அடிப்படை சங்கங்களிற்கு குறித்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளது.<br>01/2012 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் கீழ் எதிர் காலத்தில் மூவரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டு ஒப்பந்தங்களை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | நிறைவேற்றுவதாக குறிப்பிடுகிறேன். |
| (இ) | 2012 சனவரி 05 திகதிய 01/2012 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பிரிவு | சமுதாய அடிப்படை சங்கமொன்றாக இனங்காண முடியாத பலங்கொட கிராம உத்தியோகத்தர் நலன்புரி சங்கத்திற்கு ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்தது. | 1,968,143 | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்க மைய செயற்பட வேண்டும் | பிரதேச செயலாளரிற்கு திருப்தியடையக் கூடிய திணைக்களத் தலைவரினால் இனங்கானும் சமுதாய அடிப்படை சங்கங்களிற்கும் ஒப்பந்தங்களை ஒப்படைக்க முடியுமாகையால் மகா சபை தீர்மானத்தின் கீழ் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 4,743,028 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,227,735 ஆனது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 8,590,000 | 8,991,122 | 7,993,892 | 4,012,406 | 8,276,000 | 8,372,029 | 8,887,800 | 3,015,177 |
| (ii) | வாடகை | 24,360,000 | 28,088,669 | 28,144,527 | 804,356 | 28,633,000 | 23,387,731 | 23,031,819 | 942,067 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,000,000 | 3,804,125 | 3,804,125 | - | 4,042,000 | 3,165,883 | 3,165,883 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 28,310,000 | 24,356,748 | 23,745,450 | 160,164 | 25,175,000 | 17,644,659 | 17,509,073 | 1,549,963 |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளின் நிலுவை வீத வரி ரூபா 3,306,474 இனை அறவிட 2019 மார்ச் வரையும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கடந்த ஆண்டுகளிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சேர்க்கப்பட்ட வீத வரி மற்றும் குத்தகை வருமானம் ரூபா 893,908 இனால் குறைந்திருந்தது. | தாமதமின்றி வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | நகர சபைக்கு 03 வருமான பரிசோதகர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் 2017 ஆண்டில் சேவையாற்றிய ஒரே வருமான பரிசோதகர் 2018 ஆண்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்றதனால் கனிஷ்ட சேவகர்களைக் கொண்டு வீத வரி சேகரிக்க வேண்டி ஏற்பட்டது. அவ்வாறே 2017 ஆண்டில் வீத வரி சேகரிக்க விசேட நிகழ்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது. அதன் காரணமாக 2017 இற்கு ஒப்பாக 2018 ஆண்டில் சேகரிக்கப்பட்ட வீத வரி வருமானம் குறைந்துள்ளது. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளில் நிலுவை வாடகை ரூபா 433,604 இனை அறவிட 2019 மார்ச் வரையும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை சேகரிக்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் | இந் நிலுவை வாடகையை பல காரணங்களால் அறவிட முடியாதிருந்ததுடன் அறவிட முடியாதிருந்த நிலுவை வாடகையை பதிவலிக்க அமைச்சரிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஏனைய கடை வாடகையை அறவிட 2019 ஆண்டினுள் விசேட நிகழ்சித் திட்டம் நடாத்தப்படவுள்ளது. |

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து 2018 திசம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய முத்திரை கட்டணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு 2019 ஏப்ரல் வரையும் தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டிற்காக முத்திரை கட்டண அட்டவணை தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அப் பதிவேடுகளுடன் தொடர்பான திணைக்கள கட்டணமும் காணி பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுள்ளது. அதற்கமைய 2017 ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் கிடைக்கவுள்ளது. 2018 சனவரி முதல் 2018 திசெம்பர் வரையான முத்திரை கட்டணங்களிற்குரிய அட்டவணையை பெற்றுத் தருமாறு காணி பதிவாளர் அறிவூட்டப்பட்டுள்ளார். |

### 2.2.5 ஒரே தடவையில் செலுத்தும் பணம் மற்றும் ஆதன வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட 03 கடையறைகளிலிருந்து 2010 மற்றும் 2013 ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய ஒரே தடவையில் செலுத்தும் பணக் கூட்டுத் தொகை ரூபா 314,748 இனை 2019 ஏப்ரல் வரையும் அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபை வருமானத்தை உரிய முறையில் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரே தடவையில் செலுத்தும் பண நிலுவை ரூபா 314,748 இனை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு உரிய விடயப் பொருப்பு அலுவலர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். |
| (ஆ) | 03 முதல் 09 ஆண்டுகள் வரையான காலத்திலிருந்து கிடைக்க வேண்டிய ஆதன வாடகை கூட்டுத்தொகை ரூபா 47,610 இனை 2019 ஏப்ரல் வரையும் அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபை வருமானத்தை உரிய முறையில சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல ஆண்டுகளாக காணப்படும் நிலுவை ஆதன வாடகையை அறவிடவும் அவ்வாறில்லை எனின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை அதிகார சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **துணைச் சட்டம்**<br>நகர சபை அதிகார சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 101 பிரதான விடயங்களில் 70 இனை மேற்கொள்ள துணைச் சட்டம் விதிக்க 2019 மார்ச் வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணைச் சட்டங்களை இயற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் விசேடமான செயற்பாடுகளிற்காக எம்மால் துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய செயற்பாடுகளிற்காக அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக கழிவுப் பொருள் முகாமை தொடர்பாக மாகாண சபையினால் வழங்கப்பட்ட துணைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. |

(ஆ) **கழிவுப் பொருள் முகாமை**

| | | |
|---|---|---|
| கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சியின் பின்னர் எஞ்சுகின்ற பகுதிகள் ஆண்டிற்கு 504 மெ.டொ அளவு கழிவுப் பொருள் மத்திய நிலையத்தில் ஒன்று சேர்கின்ற போதும் அக் கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படாத விதத்தில் வெயியேற்றும் முறைமை ஒன்றை 2019 மார்ச் வரையும் தயாரித்திருக்கவில்லை. | முறையான கழிவுப் பொருள் முகாமை தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒன்று சேர்ந்துள்ள உக்கலடையாத கழிவுப் பொருட்களின் மீள்சுழற்சிக்காக எரிகருவி நிர்மாணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் தற்போது ஒன்று சேர்ந்துள்ள உக்கலடையாத கழிவுப் பொருட்களை வேறாக்கி இரத்தினபுரி மகா நகர சபைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும், தமது விடய பரப்பிற்கு அமைய அடைந்து கொள்ளக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கம், அதனுடன் தொடர்பான இலக்குகள், பயன்பாட்டு தரவுகள், இலக்கு சென்றடைய வேண்டிய இடங்கள் மேலும் முன்னேற்றத்தை அளவிடக் கூடிய அளவுகோள்களை இனங்காண நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக நீண்ட கால திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்துள்ளதுடன் அந்த நோக்கங்களிற்கான உலகளாவிய குறிகாட்டிகளுடாக நகர சபை எல்லையில் பொது மக்கள் வாழ்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் தற்போது தயாரிக்கப்படுகின்றது. அந்நோக்கங்களின் சில நோக்கங்களை மேற்கொள்வதற்காக தற்போதும் நிகழ்சித் திட்டங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக கழிவகற்றல் சேவை முறைமையினூடாக மல கழிவுகளை துப்பரவு செய்து சுற்றாடலிற்கு வெளியிடல். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2016 மே 21 ஆம் வெசக் பௌரனமி போயா தினத்தன்று 163,110 மில்லி லீட்டர் மதுபானத்தை அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கு மாற்றமாக நகர சபைக்கு சொந்தமான பலங்கொட விடுதியில் விற்பனைக்காக வைத்திருந்ததன் மீது இரத்தினபுரி உதவி மதுவரி ஆணையாளரினால் 2016 ஆகஸ்ட் 08 திகதி விதித்த ரூபா 1,515,000 தண்டப் பணத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட்டுக் கொள்ளும் | குறித்த அனைத்து குற்றங்களையும் வழக்கின் குற்கங்களாக தாக்கல் செய்து செலுத்தப்பட்ட பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பலங்கொட நதர சபை விடுதியில் வெசக் பௌரனமி போயா தினத்தன்று அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கு மாற்றமாக செய்யப்பட்ட செயல்களிற்கு மதுவரி திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட தண்டப்பணத்தை அறவிட மூன்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களிற்கு எதிராக பலங்கொட மாவட்ட நீதிமன்றத்தில் இச் சபையின் |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் சபை செலுத்தியிருந்தது. தண்டப் பணத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு குற்றம் சாட்டப்பட்ட மூவரிற்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உதவி மதுவரி ஆணையாளரின் குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் வெசக் பௌரனமி போயா தினத்தன்று மதுபானம் விற்பனை செய்தல் எனும் குற்றச்சாட்டு உள்ளடங்களாக ஏனைய குற்றங்களை வழக்கின் குற்றங்களாக உள்ளடக்க சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | சட்டத்தரணியூடாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு ஐயவினாவினூடாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள சில குற்றச் சாட்டுகள் உள்ளடக்கப்பட்டில்லாததுடன் அக் குற்றச்சாட்டுகளை மீண்டும் வழக்கிற்கு உட்படுத்த சட்டத்தரணியிற்கு எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பெறுமதி ரூபா 596,080 ஆன மறுக்கப்பட்ட காசோலைகள் மற்றும் பெறுமதி ரூபா 4,012,406 ஆன பெற வேண்டிய வீதவரி தொடர்பாக காலப்பகுப்பாய்வு மற்றும் விரிவான அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும் | மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக கணக்கய்வு ஐவினாவில் குறிப்பிடப்படும் விரிவான அட்டவணையை பெற்றுக் கொடுக்க இயலாமைக்கு காரணம் பலவருடங்களின் கூட்டுத் தொகை நிலவுகின்றமையாகும். |
| (இ) | பஸ் தரிப்பிடம் உள்ளிட்ட வியாபார கட்டிடத்தொகுதியை நிர்மாணிப்பதற்காக தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து எடுக்கப்பட்ட கடனிற்காக 2005 ஆண்டு முதல் செலுத்த வேண்டிய கடன் தவணைகள் மற்றும் வட்டி உள்ளடங்களாக ரூபா 145,338,240 செலுத்தப்பட்டிருக்கவிலை. | காலத்திற்கேற்ப கணக்குகள் தீர்க்கப்பட வேண்டும். | இக்கடன் தொகையை தீர்பபது தொடர்பாக பிரதான செயலாளர் அலுவலகத்தில் நடந்த கலந்துறையாடலின் போது சபையினால் கடன தொகையை மாத்திரம் செலுத்தவும் நிலுவை வட்டியை பதிவழிக்க மற்றும் வட்டி சதவீதத்தை குறைத்து கடன் தொகையை மீள் திருத்தி 15 ஆண்டுகளில் செலுத்துவதற்காக இணங்கப்பட்டது. அதன் பிரகாரம் மகா சபை அங்கீகாரத்தின் படி மாதம் ரூபா 769,680 வீதம் 2019 மே மாதம் முதல் 2034 ஏப்ரில் மாதம் வரை 180 தவணைகளில் கடன் தொகை தீர்க்கப்பட உள்ளது. |
| (ஈ) | கடந்த ஆண்டுகளிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 779,422 ஆன உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு பணம் 2019 ஏப்ரில் வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும் | உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு பண மீதிகளில் மரணித்த ஊழியர்களிற்கு சொந்தமான மீதிகள் இருக்கின்றதா என பிரதேச செயலக காரியாலயத்துடன் இணக்கம் செய்து அதன் |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரகாரம் கொடுப்பனவிற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001 ஆண்டு முதல் வெற்றிடமாக நிலவும் செயலாளர் பதவிற்காக 2016 ஆண்டு முதல் பொது முகாமை உதவியாளர் சேவையின் விஷேட தர உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்தார். | வெற்றிடங்களை நிரப்ப நடவடிககை எடுக்க வேண்டியமை. | நிறைவேற்று தரத்தின் இலங்கை நிர்வாக சேவை செயலாளர் பதவி 2001 ஜூலை மாதம் முதல் வெற்றிடம் ஆன போதும் இது தொடர்பாக தொடர்ந்தும் உள்ளுராட்ச்சி ஆணையாளர் அலுவலத்திற்கு அறிவூட்டி கடிதம் அனுப்பப்படுவதுடன் எதிகாலத்தில் இவ் வெற்றிடம் பூர்ணப்படுத்தப்படவுள்ளது. |
| (ஆ) | 10 பதவிகளில் நிலவும் 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காததனால் குறித்த செயல்கள் மற்றும் செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்ள தடையாக இருந்தது. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிககை எடுக்க வேண்டியமை. | இச் சகல வெற்றிடங்கள் தொடர்பாக காலாண்டு வாரியாக உரிய உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்படுகின்றனர். |
| (இ) | 2016 ஆண்டில் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினூடாக பலன்கொட நகர சபையின் தீ அணைப்பு பிரிவு ஆளணியிற்கு 20 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அப் பதவிகளிற்கு ஆட்சேர்க்கப்படாததனால் அப் பிரிவை 2019 ஏப்ரில் வரையும் முறையாக நிருவப்பட முடியாமல் உள்ளது. | வெற்றிடங்களை நிரப்பி தீ அணைப்பு பிரிவை முறையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீ அணைப்பு ஆளணி பதவிகளிற்காக ஆட்சேர்ப்பு உள்ளுராட்சி திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட வேண்டியதனால் இவ் வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளுராட்சி திணைக்களத்திற்கு அறிவிக்கப்ட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | விற்கப்படும் காணியில் பெறுமதியின் ஒரு சதவீத வரி தொகை காணி விற்பனை செய்யப்படுவதுடன் விற்பனையாளரினால் சபைக்கு செலுத்துவதாக நிபந்தனை உள்ளிட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் 2015 மற்றும் 2016 ஆண்டகளின் 03 காணி ஏலவிற்பனைகளின் பெறுமதி | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வெண்டும் | கணக்காய்வு ஐவினாவில் குறிப்பிடப்படும் விதத்தில் 03 காணிகளில் விற்கப்பட்ட காணித்துண்டுகளிலிருந்து ஒரு சதவீத தொகையை சபைக்கு செலுத்துமாறும் விற்பனை செய்யப்படாது எஞ்சியுள்ள காணித்துண்டுகள் சார்ப்பாக விற்பனை பெறுமதி மீது ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக ஆய்வு செய்யப்படாது ரூபா 15,500 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | | சதவீத தொகையை செலுத்துவதற்காக ஒப்பந்தம் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்குமாறும் குறித்த காணி சொந்தக்காரர்களை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கழிவு பொருள் முகாமை பயிற்ச்சி மத்திய நிலைய பதிவினை புதுப்பித்து கழிவு பொருள் செயற்பாட்டு உதவி பாடநெறியை நடாத்த முறைமையொன்று 2017 ஆண்டு முதல் இருக்காததுடன் 2017 ஆண்டில் பயிற்ச்சியை முடித்த 73 பெயர்களிற்காக உரிய சான்றிதழ்களை வழங்க 2019 ஏப்ரல் வரையும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பயிற்ச்சி மத்திய நிலையத்தின் பதிவினை புதுப்பித்து பாடநெறியை மீள் ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப் பாட நெறியை நடாத்திய வளவாளர் பலங்கொட நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் 2017 ஆண்டில் இடம்மாறி சென்றதுடன் கழிவுப் பொருள் செயற்பாட்டு பாடநெறியை நடாத்த மதிப்பீட்டாளர் ஒருவர் இல்லாதிருந்தார். பயிற்ச்சியை பூர்த்தி செய்துள்ள 73 பெயர்களின் விண்ணப்பப்பத்திரங்கள் பதிவிற்காக தொழில் பயிர்ச்சி அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், பயிற்ச்சி மத்திய நிலைய பதிவை புதுப்பிக்க விண்ணப்பமும் அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டில் பாதீடின் பிரகாரம் கழிவு பொருள் முகாமை மத்திய நிலைய மேன்பாடிற்காக 04 கருத்திடங்களிற்கு ரூபா 20,000,000 ஒதுக்கீடு மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் ஏற்பாடு செய்யயப்பட்டிருந்த போதும் ஒதுக்கீடு கிடைக்காததனால் அக் கருத்திட்டங்களை செயற்படுத்த முடியாமல் இருந்தன. | கழிவுப் பொருள் முகாமை மத்திய நிலையத்தை மேன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டு பாதீட்டை தயாரிக்கும் போது கழிவு பொருள் முகாமை மத்திய நிலையம், பிலாஸ்டிக் மற்றும் பொலிதீன் மத்திய நிலையத்திற்கு ரூபா 15 மில்லியனும் பிலாஸ்டிக் மற்றும் பொலிதீன் எரி கருவிற்காக ரூபா 5 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. இந் நிதி மாகாண சபை மற்றும் உள்ளுராட்ச்சி அமைச்சிடமிருந்து கிடைக்காததனால் இக் கருத்திட்டங்களிற்காக எவ்வித செலவும் மேற்கொள்ள முடிய வில்லை. |

### 3.5 சொத்துக்கள் முகாமை

**விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு அன்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா 24,928,666 பெறுமதியான மோட்டார் கிறேடர் இயக்குனர் ஒருவர் இல்லாததனால் 2015 ஆண்டு முதல் செயலற்று நிலவியது. | சொத்துக்களை பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | அன்பளிப்பாக கிடைத்த இவ் இயந்திரத்திற்கு இயந்திர இயக்குனர் ஒருவர் இல்லாததனால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதுள்ளது. இயந்திர இயக்குனர் ஒருவரை |

நியமிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மூலதன செலவினத்திற்காக மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 31.68 மில்லியன் அல்லது 70 சதவீதம் எஞ்சியிருந்தது. | பாதீட்டை நிதிக் கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்திக் கொள்ள போதிய கவனம் செலுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் இலக்குகளை அடைந்து கொள்ளவும் செயற்பட வேண்டும். | மாகாண சபையிலிருந்து மற்றும் மத்திய அரசின் சாமாந்திர அமைச்சுகளிலிருந்து ஒதுக்கீடு கிடைக்கப்பெறாததனால் இம் மூலதன செலவினத்திற்காக மதிப்பிடப்பட்ட செலவுகளை மேற்கொள்ள முடியாமலிருந்தது. இவை சபையினால் கட்டுப்படுத்த முடியாத நிலையின் கீழ் நடப்பதாக தயவாக சுற்றிக்காட்டுகிறேன். |

**4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆண்டிற்கு முன்னரிரிருந்து இனங்காண முடியாது முன்கொண்டு வரப்பட்ட முற்பணம் ரூபா 33,696,533 யினை தீர்ப்பதற்கு 2019 ஏப்ரல் வரையும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | முற்பணத்தை சரியாக இனங்கண்டு அதன் பிரகாரம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2008 இற்கு முன்னரிலிருந்து நிலவி வரும் முற்பண கணக்கு மீதி ரூபா 33,696,533 யினை உறுதிப்படுத்திக்கொள்ள பதிவேடுகளை தேடிகொள்ள இயலாததுடன் இம் முற்பணம் தீர்வு செய்யப்பட்ட போதும் கணக்கீடு செய்யப்படாததனால் தொடர்ந்தும் முன் சென்று பெரும் தொகை முற்பண கணக்கு மீதியாக உறுவாகியுள்ளது. இம் மீதியை தீர்ப்பதற்கு உள்ளூராட்ச்சி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | கடந்த ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்ட ரூபா 9,303,601 ஆன பணமாற்று கணக்கு மீதியை 2019 ஏப்ரில் வரையும் தீர்த்துக்கொன்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2010 இற்கு முன்னரான ஆண்டுகளில் பணமாற்று உரிய முறையில் கணக்கீடு செய்யப்படாததால் பணமாற்று கணக்கில் ரூபா 9,303,601 ஆன தொகையொன்று தொடர்ந்தும் நிலவி வருவதுடன் அதனை |

| | | | |
|---|---|---|---|
| | | | எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு விடுதி கட்டணம் மற்றும் 98 விடுதி கடன் கொடுனர்களிடமிருந்து 07 ஆண்டுகளை விஞ்சிய காலமாக அறவிட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,033,459 யினை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய கணக்குகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | விடுதி ஆரம்பிக்கும் போது விடுதியில் ஏற்படும் நட்டங்களை நிவர்த்தி செய்வதற்காக சேவை கட்டணத்திலிருந்து 20 சதவீத பணத்தை வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ள தீர்கானிக்கப்பட்டதுடன் அப் பணத்திலிருந்து இது வரை விடுதியின் அறவிடப்படாத கடன்படுனர் மீதிகளை அறவிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| (ஈ) | குத்தகை ஒப்பந்தங்களிற்கு முரணாக பஸ் தரிப்பிடத்தில் கூட்டுத் தொகை ரூபா 10,100 ஆன மாதாந்த வாடகைக்கு குத்தகை வழங்கப்பட்ட இரண்டு கடையறைகளை கூட்டுத்தொகை ரூபா 35,000 யிற்கு உப குத்தகை வழங்கிருந்ததுடன் பொதுச் சந்தையில் 07 கடையறைகளும், உப குத்தகை வழங்கப்பட்டிருந்தன. அது தொடர்பாக 2019 மார்ச் வரையும் நடவடிக்கையொன்று எடுத்திருக்கவில்லை. | குத்தகை ஒப்பந்த பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொதுச் சந்தை கடையறைகள் மற்றும் பஸ் தரிப்பிட கடையறைகளை உப குத்தகை வழங்கியது தொடர்பாக தற்பொது நகர சபையின் வருமான பிரிவு அலுவலரகளினால் ஆய்வொன்று செய்யப்பட்டுள்ளதுடன் அத் தகவல்களை அடிப்படையாக கொண்டு அறிக்கை ஒன்றை தயாரித்து அதற்காக தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள உதவி உள்ளுராட்ச்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (உ) | குத்தகை ஒப்பந்தங்களிற்கு முரணாக ஒப்பந்தக்காரரினால் பொதுச் சந்தை பிரவேச முற்பக்க கடையறைகள் 02 இற்கு புதிதாக பகுதிகளை சேர்த்தி விரிவாக்கப்பட்டிருந்தனர். அதற்கு மேலதிகமாக பிரதான பஸ்தரிப்பிடத்தில் 04 கடையறைகள் ஒன்றுக்கொன்று பயனிக்ககூடிய வகையில் அதன் உற்புற சிவர்களை உடைத்து தொடர்ப்பு படுத்தியிருந்ததுடன் சபை 2019 மார்ச் வரையும் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குத்தகை ஒப்பந்த பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடையறைகளில் புதிதாக பகுதிகளை சேர்தல் மற்றும் மாற்றுதல் தொடர்பாக இது வரையும் நகர சபையின் வருமான பிரிவு உத்தியொகத்தரினால் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் செய்யப்பட்டுள்ளதுடன் அத் தகவல்களை அடிப்படையாக கொண்டு அறிக்கை ஒன்றை தயாரித்து அதற்காக தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள உதவி உள்ளுராட்ச்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |